**ஒருங்கிணைந்த கூவம் நதி சீரமைப்பு திட்டத்தின் சுருக்கம் - ஒரு பார்வை**

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையானது (CRRT) சென்னை நகரில் ஓடும் நதிகளையும் நீர்வழித்தடங்களையும் சுத்தம் செய்வதற்கு அரசால் அமைக்கப்பட்ட ஒரு அறக்கட்டளையாகும். கூவம் நதியை பருத்திப்பட்டு தொடங்கி அதன் முகதுவாரம் வரை சுத்தம் செய்து புனரமைக்கும் பொருட்டு CRRT யானது தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனமான TNUIFSL மூலம் LKS India Pvt Ltd என்ற ஆலோசனை நிறுவனத்தை ஈடுபடுத்தியது.

LKS India இந்த திட்டத்தை தயார் செய்து கடந்த நவம்பர் 2014 அரசிடம் சமர்ப்பித்தது. 2015 இல் இந்த திட்டத்தின் சுருக்கவடிவு CRRT யின் இணையதளத்தில் மக்களின் பார்வைக்காக வெளியிடப்பட்டது. இருப்பினும் இந்த திட்ட அறிக்கையின் முழுவடிவு வெளியிடப்படவில்லை. இந்த நிலையில் இந்த திட்டத்தை அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் CRRT யின் சுருக்க அறிக்கை இங்கு எளிமையாக வழங்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த கூவம் நதி சீரமைப்பு திட்டத்தின் நோக்கம் பின்வருமாறு:** மாசுபாட்டினை குறைத்து ஒரு நீடித்தநிலையான முறையில் நதியை பாதுகாத்தல், மேலும் நீரின் தரத்தை உறுதிசெய்யவும் நிலையானதாக வைக்கவும் ஆற்றில் குறைந்தபட்ச நீரோட்டத்தை உறுதிசெய்தல், ஆற்றின் வெள்ளநீர் கடத்தல் கொள்ளளவை உயர்த்துதல், கூடியவரை ஆற்றின் கரைகளை மேம்படுத்தி அழகுபடுத்துதல், நீர்வழி போக்குவரத்திற்கான சாத்தியக்கூறுகளையும் வருங்கால பயன்பாட்டுத் தேவைகளையும் ஆய்வு செய்தல்.

கூவம் நதியை புனரமைக்கும் திட்டத்தை முன்மொழியும் முன் நதியின் தற்போதய நிலை குறித்த ஆய்வு நடத்தப்பட்டது. அந்த ஆய்வின் விவரங்களும் அதன் அடிப்படையில் முன்மொழியப்பட்ட திட்டத்தின் அம்சங்களும் பின்வருமாறு.

**சுற்றுச்சூழல் ஆய்வு:** கூவம் நதியில் 26 இடங்களில் எடுக்கப்பட்ட மாதிரிகள் அனைத்திலும் நீரில் கலந்திருக்க வேண்டிய பிராணவாயு அறவே இல்லை என்பதும், கழிவுநீரில் காணப்படும் பீகல் காளிபோரம் என்ற வகை பாக்டேரியாக்கள் நிரைந்து இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் தாமிரம், துத்தநாகம், காட்மியம் போன்ற கனத்த உலோகங்கள் நீரில் கலந்திருப்பதும் அறியப்பட்டுள்ளது.

**கழிவுநீர் மற்றும் சுகாதார பிரச்சனை:** கூவம் நதியில் 116 கழிவு நீர் வடிகால்கள் கலப்பது கண்டறியப்பட்டுள்ளது. பெரும்பான்மையான மழைநீர் வடிகால்கள் கழிவுநீரை கூவத்தில் சேர்ப்பது தெரியவந்துள்ளது. சென்னை மெட்ரோ வாட்டர் இணையதளத்தில் பழைய சென்னை மாநகராட்சி பகுதிளில் 100% கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் புதியதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளில் தான் கழிவுநீர் இணைப்புச் சேவைகள் பற்றாக்குறையுடன் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல் இந்த அறிக்கை நதியின் கரைகளில் உள்ள குடிசை பகுதிகளில் கழிவுநீர் போன்ற சுகாதாரச் சேவைகள் இல்லை என்பதை சுட்டிக்காட்டி நதி மாசடைதலுக்கு குடிசைவாழ் மக்களும் காரணம் என்று குற்றம்சாட்டுவதாக உள்ளது. நதி மாசடைதலுக்கு கண்டறியப்பட்ட வேறு காரணங்கள் - அதிக மக்கள் நெருக்கம் கொண்ட பகுதிகளில் கழிவுநீர் இணைப்பு இல்லாமல் இருப்பதும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் கொள்ளளவு திறன் குறைப்பாடுகளும், ஏற்கனவே உள்ள உள்கட்டமைப்பு வசதிகளின் பயன்பாடு முழுமை அடைந்ததும், சட்டத்திற்கு புறம்பாக கழிவுநீர் மழைநீர் வடிகால்களில் கலக்கவிடப்படுவது போன்றவை.

**முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு:** தற்போது ஆற்றில் கலக்கும் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கால்வாய்களை இடைமறித்து திருப்பிவிடும் பொருட்டு 16 குழாய்கள் பதித்தல், மொத்தமாக 14.6 mld திறன் கொண்ட 6 சிறிய வகை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்தல் மற்றும் பாதாளசாக்கடை திட்டங்களை விரிவுபடுத்துதல்

**திடக்கழிவு பிரச்சனை:** கூவம் நதி கரைகளில் காலியாக உள்ள இடங்களில் கண்காணிப்பு இல்லாததால் உள்ளாட்சி அமைப்புகள் திடக்கழிவுகளை கொட்டுவது கண்டறியப்பட்டுள்ளது. இந்த அறிக்கை கூவம் கரையோரம் வாழும் மக்கள் கொட்டும் குப்பைகளாலும் நதி மாசடைகிறது என்றும் நோய் ஏற்படுத்தும் உயிரிகள் பெருகுவதாகவும் குற்றம்சாட்டுகிறது. கூவம் கரைகளில் 31,765 திடக்கழிவும் 30,554 கட்டுமானக் கழிவுகளும் கொட்டப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு காரணம் திடக்கழிவை கையாளும் திறன் குறைபாடும் சட்டத்திற்கு புறம்பாக குப்பைகளை கொட்டுவதை தடுக்காமல் இருப்பதும் தான் என்று இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

**முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு:** கூவம் கரையோரம் கொட்டப்பட்டுள்ள அணைத்து திடக்கழிவு மற்றும் கட்டுமானக் கழிவுகளையும் சுத்தம் செய்து செடிகள் மற்றும் மரங்கள் வளர ஏதுவாக புதியதாக நல்ல மண்ணை நிரப்பவது, கூவம் கரைகளில் தடுப்பு வேலிகள் அமைப்பது, குப்பைகளை கொட்ட தொட்டிகள் அமைப்பது, நதியில் மிதந்து வரும் கழிவுகளை தடுத்து அப்புறப்படுத்த "பூம்" அமைப்புகளை நிறுவுவது போன்ற தீர்வுகள் முன்மொழியப்பட்டுள்ளன.

**மண் பரிசோதனை:** மரம் நடவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மண் பரிசோதனை செய்யப்பட்டது. இதில் மண் அபாயகரமாக இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த மண்ணை குப்பைக்கொட்டும் வளாகங்களில் கொட்டி அப்புரபடுத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆற்றுப்படுகை மாறுதல்:** கூவம் ஆற்றுப்படுகை மிகவும் குறுகி தனது இயற்கை நிலையிலிருந்து பல மாறுதல்களை கண்டுள்ளதாகவும் இதற்கு காரணம் ஆற்றங்கரையோர ஆக்கிரமிப்புகளும், பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தரைப்பாலங்களும் தான் என்று இந்த அறிக்கை கூறுகிறது.

**முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு:** வெள்ளப்பெருக்கை எதிர்கொள்ளும் அளவு ஆற்றின் கொள்ளளவை மேம்படுத்த ஆற்றுப்படுகைகளில் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும். அதிலிருந்து பிரித்தெடுக்கப்படும் மண்ணில் பாதியளவு ஆற்றிலும், மற்றவை குப்பைமேடுகளிலும் கொட்டப்படும். மேலும் ஆற்றுப்படுகைகளை ஆழப்படுத்துவது, அதன் சாய்வுகளை ஒழுங்குப்படுத்துவது, ஆற்றோடு இணைந்து சிறு கால்வாய் அமைப்பது போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஆற்றின் முகத்துவாரத்தில் மணல்மேடுகள் உருவாவதை தடுக்க தொடர்ந்து தூர்வாரப்படும்.

**சுற்றுசுழல் மாற்றம்:** குறிப்பிட்ட பருவ காலத்தில் மட்டும் ஓடும் தன்மை கொண்டது கூவம் நதி. நதியின் நீரோட்டமும் சீராக இருப்பதில்லை.. இத்தன்மையின் அடிப்படையில் இந்நதியை எப்போதும் நீர் வளத்துடன் காணும்படி செய்வது நடைமுறையில் சாத்தியமில்லை என்பதை இந்த அறிக்கை அங்கீகரிக்கிறது. எனவே கடந்த காலங்களின் நீரோட்டத்தின் அடிப்படையே இங்கு பின்பற்றப்பட்டுள்ளது. நீர் வரத்தையும் நீர் பயன்பாட்டையும் கருத்தில் கொண்டு நதி சீரமைப்புக்கு தேவையான நீர் இருப்பு தீர்மானிக்கப்பட உள்ளது. நீரின் சமன்பாட்டு கணக்கீட்டின்படி, வரும் 2020-ஆம் ஆண்டு 73% நீர் பற்றாக்குறை ஏற்படும்.

**உயிர் பல்வகை:** மரங்கள், மூலிகை செடிகள் போன்ற பல்வேறு தாவர இனங்கள் நடுவதற்கு ஏழு இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. பருத்திப்பட்டு முதல் முகத்துவாரம் வரை விலங்கினங்கள் தொடர்பாக கணக்கீடு செய்ததில் மீன் இனங்களே இல்லை என்பதும், ஆனால் சில பூச்சிகள், நத்தை, பறவைகள், வீட்டு விலங்குகள் மற்றும் மிதக்கும் உயிரிகள் காணப்படுகின்றன என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

**முன்வைக்கப்பட்டுள்ள திட்டங்கள்:** சதுப்பு நிலம் சார்ந்த மரங்கள் நடப்படும். மனித வாழ்வியல் காரணமாக மாசடைந்துள்ள ஆற்று மணலில் எந்த காய்கறிகளையோ மூலிகை செடியையோ பயிரிட முடியாது. மாறாக, வியாபாரத்திற்காக விளைவிக்கப்படும் மரங்களை வளர்க்கலாம்.

**சமூக தாக்கம் குறித்த மதிப்பீடு:** தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் (TNSCB) வழங்கியுள்ள கூவம் நதியோரமாக அமைந்துள்ள குடிசைப்பகுதியின் பட்டியல், பொது பணித்துறையால் வழங்கப்பட்டுள்ள எல்லைகோடு (Right of Way line) மற்றும் CMDA-ன் இரண்டாவது பெருந்திட்டத்தினால் குறிப்பிடப்பட்ட நதிநீர் பாதை (Fluvial Corridor) ஆகியவற்றின் அடிப்படையில் சமூக தாக்கம் குறித்த மதிப்பீடு அமைந்துள்ளது. இந்த தொகுப்பு தயாரித்த ஆலோசகருக்கு RAY தகவல்கள் வழங்கப்படவில்லை.

இத்திட்டத்தினால் 14257 குடும்பங்கள் வாழும் 58 குடிசைப்பகுதிகள் பாதிக்கப்படவுள்ளன. அதில் 49 சென்னை மாநகராட்சியிலும், 9 சென்னை மாநகராட்சி எல்லைக்கு அப்பாற்பட்டும் உள்ளன. எல்லைக்கோடு, நதிநீர் பாதை, நகர மீளுருவாக்கத்திற்கான தேவை, ஆற்றின் முகப்பை அழகுப்படுத்துதல், வெள்ள அபாயம், நகர்புற நதி முகப்பின் வளர்ச்சி ஆகியவற்றை கருத்தில் கொண்டு பாதிக்கப்படவுள்ள குடிசைப்பகுதிகள் கண்டறியப்பட்டன. குடிசைப்பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தர முன்னேற்றத்தை முக்கிய நோக்கமாக குறிப்பிட்டு, வெள்ள அபாயம் தவிர மற்ற கூறுகள் எதுவும் மக்களை சார்ந்து கருத்தில் எடுக்கப்படவில்லை.

இந்த கூறுகளை கருத்தில் கொண்டு மூன்று சாத்தியமான மாதிரிகைகள் வழங்கப்பட்டுள்ளன.

1. வெள்ள அபாயமின்றியும், ஆற்றின் முகப்பு உருவாக்கத்திற்கு தடையில்லாமலும், இருக்கும் இடத்திலேயே வளர்ச்சி ஏற்படுத்துவதற்கு ஏதுவான குடிசைப்பகுதிகளை கண்டறிவது,

2. கண்டறியப்பட்டுள்ள 20 காலியிடங்களில் புதிதாக குடியிருப்புகளை கட்டமைப்பது, CRZ விதிகள் மற்றும் CMDA-ன் நிலப்பயன்பாட்டுக்குக்கான விதிமுறைகளின் படி, இது விலக்கப்பட்டது.

3. மக்களை குடிசைப்பகுதிகளிருந்து அப்புறப்படுத்தி, TNSCB-ன் வீட்டுமனைகளில் மறுகுடியமர்த்துவது.

**வாய்ப்பு 1:** பகுதி சார்ந்த மறுகுடியமர்வு மற்றும் இருக்கும் இடத்திலேயே வளர்ச்சியால் 87% (12459) குடும்பங்கள் பாதிக்கப்படும்.

**வாய்ப்பு 2:** பகுதி சார்ந்த மறுகுடியமர்வு மறுகட்டமைப்பு மற்றும் இருக்கும் இடத்திலேயே வளர்ச்சியால் 47% (6681)குடும்பங்கள் பாதிக்கப்படும்.

**வாய்ப்பு 3:** பாதிப்படையும் 100% குடும்பங்களையும் மறுகுடியமர்த்துவது.

மறுகுடியமர்வு பகுதிகளான எழில் நகர் மற்றும் பெரும்பாகத்தில் ஏற்கெனவே கட்டப்பட்டு குடியமர்வுக்கு தயார் நிலையில் உள்ளதாக காரணம் காட்டி TNSCB வாய்ப்பு 3-ஐ தேர்வு செய்துள்ளது. இத்திட்டத்தால் பாதிக்கப்படும் அனைத்து குடும்பங்களுக்கும் மறுகுடியமர்வு பகுதியில் வீடு வழங்கப்படும். இந்த திட்டத்திற்கான மொத்த தொகை ரூ.1934.88 கோடியில், ரூ.1087.63கோடி மறுகுடியமர்வுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவருக்கும் ரூ.5000 இடமாற்றத்திற்கான உதவி தொகையாகவும், ஜீவன உதவி தொகையாக ரூ.2500, 12 மாதங்களுக்கு வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு குடியிருப்பின் உத்தேச மதிப்பாக ரூ.6.5லட்சம் கணக்கிடப்பட்டு, பயனாளியிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய 10% CRRT-யால் செலுத்தப்படும்.

**ஆற்றின் முகப்பை அழகுபடுத்தும் திட்டம்:** 9.6கி.மீ.க்கு 11 பராமரிப்பு வழித்தடங்கள், 24கி.மீ.க்கு 22 நடைபாதை வழித்தடங்கள், 19கி.மீ.க்கு மிதிவண்டி வழித்தடங்கள், 24 பொழுதுபோக்கு பூங்காக்கள், குழந்தைகளுக்கான மைதானம், உணவகம் போன்றவை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் சில பகுதிகளில் வேலியிடப்பட்டு தாவரங்கள் வளர்க்கப்படும்.

திட்டத்தின் கட்டங்கள்: இதன் மொத்த திட்ட வேலையும் துணைத் திட்டங்களாக பிரித்து அதன் சார்ந்த துறைகள் அமல்படுத்துகின்றன. அவை 60 குறுகியகால துணைத் திட்டங்கள், 7 நடுத்தரகால திட்டங்கள் மற்றும் 2 நீண்டகால திட்டங்கள் ஆகும்.